கல்வி அமைச்சு கல்வி அமைச்சு கல்வி அமைச்சு Ministry of Education, Ministry of Education, Ministry of Education

**கல்வி அமைச்சு**
**தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல் கிளை**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(சாதாரண தர)ப் பரீட்சை - 2024(2025)
**General Certificate of Education (Ord. Level) Examination - 2024(2025)**

*மூன்று மணித்தியாலம்*
***Three hours***

தமிழ் இலக்கிய நயம் I, II
**Appreciations of Tamil literary Texts I, II**

**48 T I.II**

மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

- ❖ வினாத்தாள் **I,** வினாத்தாள் **II** ஆகியவற்றுக்கு விடையளித்து, முழுநேரமும் முடிவடைந்த பின்பு அவற்றை வேறுவேறாகக் கையளிக்கவும்.
- ❖ வினாத்தாள் **I, இ**ற்குரிய விடையை **இவ்வினாத்தாளிலேயே** எழுத வேண்டும். இதற்காக வழங்கப்பட்டுள்ள இடத்தை மாத்திரம் பயன்படுத்தவும்.
- ❖ வினாத்தாள் **I** இற்கு **40** புள்ளிகள்**.**
- ❖ **வினாத்தாள் II** இற்கு **60** புள்ளிகள்.

## வினாத்தாள் I

1. i – v வரையுள்ள வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.

(i) ‘‘அனை ! எதிர்ந்து இவன் ஆய் வளையரோடும்
மனையின் வாயில் வழியினை மாற்றினால்
நினையும் வீரன் அந்நீள் நெறி நோக்கலான்’’

(அ) இங்கு வீரன் என சுட்டப்படுபவன் யார்?

……………………………………………………………………………………………………..

(ஆ) இப்பாடல் மூலம் கூறப்பட்ட ஆலோசனை யாது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

(ii) போர்க்களத்தில் பகைவரும் அஞ்சும் என் வலிமை இந்தப் பெண்ணின் வதன வனப்புக்கு தோற்று அழிந்துவிட்டதே ‘‘ஓ’’ என அலறும் ஓர் போர் வீரனை காமத்துப்பாலில் காட்டுகிறார் திருவள்ளுவர்.

(அ) இவ்விடயம் எந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது?

……………………………………………………………………………………………………

(ஆ) இங்குமென்மையின் வலிமை எவ்வாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

(iii) ‘‘சுனை பூக் குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை’’

(அ) தொடலை, தைஇ ஆகிய சொற்களின் பொருளைத் தருக.

……………………………………………………………………………………………………

(ஆ) இங்கு பெண்ணின் அழகில் காணப்படும் நயத்தினை விளக்குக.

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

(iv) ‘‘கொங்கையாற் கூடற்பதி சிதைத்து
கோ வேந்தை செஞ்சிலம்பால் வென்றாளை
பாடுதும் வம்மெல்லாம் என்று ஆடல் மகளீர் பாடவும் ஆடவும்’’

(அ) கூடற்பதி என்றழைக்கப்படுவது எது?

…………………………………………………………………………………………………………

(ஆ) கோவேந்து, செஞ்சிலம்பால் வென்றவர் எனப்படுவோர் யாவர்?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(v) ‘‘மாடசாமி கிடாரி கண்ணுக்குட்டியாய் வளர்ந்தாலும் பரவாயில்லை நாளைக்கி பால் கொடுக்கும் நல்ல விலைக்கு யாரும் கேட்டால் கொடுத்திடலாம். இத வச்சிகிட்டு என்ன செய்யப்போறாய்?’’

(அ) இக்கூற்றைக் கூறியவர் யார்?

…………………………………………………………………………………………………………

(ஆ) கிடாரிக் கன்று என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

…………………………………………………………………………………………………………

2. கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(அ)

ஜப்பானிய கவிதை மரபு தன்கா, சோக்கா, ரெங்கா, டாங்கா, சென்றியு, ஹைபுன், ஹொக்கு என பல வகை பா வடிவங்களை தன்னுள் பொதிந்து வைத்துள்ளது. அதன் இன்னொரு வடிவமே ஹைக்கூ ஆகும்.

ஹைக்கூ என்பதன் அர்த்தம் என்ன? என்ற கேள்விக்கு சேம்பர்ஸ் அகராதி 5, 7, 5 அசைகள் (Syllables) கொண்ட ஜப்பானிய கவிதை என்று பதிலுரைக்கின்றது. எனினும் இந்த விளக்கத்தையும் தாண்டி ஹைக்கூ ஒரு அனுபவ பகிர்வு, வியப்பில் ஆழ்த்தும் வீச்சு, இரசனையூட்டும் அழகு, சிந்தனை எழுப்பும் அலை, உணர்ச்சியை ஏற்றும் தூண்டியாக அமையும் ஆற்றல் மிக்க வடிவம், ஒரு மின்னல் அல்லது மின்மினி எனலாம்.

அனுபவத்தையும் உணர்வையும் பிறருக்குத் தர முயல்வதுதான் ஹைக்கூ. உண்மையில் கலை இலக்கியம் அனைத்தினதும் நோக்கம் இதுதான் கவிஞனோ கலைஞனோ ஓவியனோ தனக்கு கிடைக்கும் அனுபவத்தை அப்படியே உணர்வு இழை அறுந்திடாதவாறு தன் சிருஷ்டியை பின்னி வாசகருக்கு பரிசளிக்கின்றான். வாசகர்கள் தமது அனுபவ வெளியுடன் இணைந்து இரசித்து இன்புறுகிறார்கள். அல்லது துயருறுகிறார்கள். ஒரு கணப்பொழுதில் மகிழ்வை அல்லது துயரை பகிர்கின்றது ஹைக்கூ.

கணப்பொழுதின் அனுபவமாக இருப்பினும் அது கிளர்த்தும் சிந்தனைகளும் சம்பாஷணைகளும் எதிர்வினைகளும் கேள்விகளும் அதிகம் வாசகர் மனசுக்குள் அலை எழுப்பும். அதனால் தான் ஹைக்கூ காந்தம் போல இழுக்கும் மொழிநடையினையும் பிரபஞ்சத்தின் அந்தரங்கங்களையும் காட்சிப்படுத்தும் தத்துவ பார்வையினையும் கொண்டுள்ளது எனலாம்.

(1) ஜப்பானிய கவிதை மரபிலுள்ள பா வடிவங்களைக் குறிப்பிடுக.

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(04 புள்ளிகள்)

(2) கலை இலக்கியங்களின் நோக்கம் பற்றிய கட்டுரை ஆசிரியரின் கருத்து யாது?

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………………

(04 புள்ளிகள்)

(3) ஹைக்கூ என்பதற்கு சேம்பர்ஸ் அகராதி கூறும் விளக்கம் யாது?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(04 ள்ளிகள்)

(4) சேம்பர்ஸ் அகராதியைத் தாண்டி ஹைக்கூவிற்கு கூறப்படும் விளக்கம் யாது?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(04 ள்ளிகள்)

(5) ஹைக்கூவின் சக்தி தொடர்பில் ஆசிரியர் கூறும் கருத்துக்கள் எவை?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(04 புள்ளிகள்)

**அல்லது**

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறுகலிங்கம் கழாஅது உடீஇக்
குவளை உண்கண் குய்ப்புகை கழுமத்
தான் துழந் தட்ட தீம்புளி பாகர்
இனிதெனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே

1. இப்பாடல் பாடப்பட்ட சந்தர்ப்பத்தை விளக்குக.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(04 புள்ளிகள்)

2. இப்பாடலில் தலைவியின் அழகு விபரிக்கப்படும் விதத்தினை விளக்குக.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(04 புள்ளிகள்)

3. தலைவனுக்காக உணவு சமைப்பதில் தலைவி காட்டும் ஈடுபாட்டினை விபரிக்குக.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(06 புள்ளிகள்)

4. இச்செய்யுளில் வந்துள்ள உவமைகளை கூறி அதில் காணும் நயத்தை விளக்குக.

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(06 புள்ளிகள்)

## வினாத்தாள் II

- ❖ பகுதி **II** இல் **முதலாம்** வினாவுக்கும், ஏனைய 2, 3, 4, 5 ஆகிய வினாக்களுள் எவையேனும் இரண்டு வினாக்களுக்குமாக மொத்தம் **மூன்று** வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.
- ❖ பகுதி **II** இற்கு **60** புள்ளிகள் வழங்கப்படும்.

1) பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வழிகாட்டல் குறிப்புகளின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் 200 சொற்களில் எழுதுக.

சுனைப்பூ குற்றுத் தொடலை தைஇப்
புனக்கிளி கடியும் பூங்கட் பேதை
தானறிந் தனளோ இலளோ பானாள்
பள்ளி யானையின் உயிர்த்தென்
உள்ளம் பின்னும் தன்னுழை யதுவே

சிரல்வாய் வனப்பின வாகி நிரலொப்ப
ஈர்ந்தண் டளவந் தகைந்தன - சீர்த்தக்க
செல்வ மழை மதர்கட் சின்மொழிப் பேதையூர்
நல்விருந் தாக நமக்கு

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத்தாம நிரைதாழ்ந்த பந்தற் கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழி நான்

உள்ளம்போய் நாண்போய் உரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்தளிர்போல் பிள்ளை மீன்
புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை பூவாளி
உள்ளரிக்க சோர்ந்தாள் உயிர்

நேற்றிரா வந்தொருவன் நித்திரையிற் கைபிடித்தான்
வேற்றூராரனென்று விடாயென்றேன் - ஆற்றியே
கஞ்சிகுடி யென்றான் களித்தின்று போவென்றேன்
வஞ்சியரே சென்றான் மறைந்து

(அ) மனித வாழ்வில் அகத்திணை பெறும் முக்கியத்துவம்

(ஆ) தலைவன் தலைவியரிடையே விளங்கும் சிற்றின்பக்காதல்

(இ) ஆன்மா இறைவன் மீது கொண்ட பேரின்பக் காதல் எடுத்துரைக்கப்பட்டிருக்கும் விதம்.

(ஈ) நாச்சியார் திருமொழியில் கூறப்பட்டிருக்கும் திருமண நடைமுறைகள்.

(உ) இப்பாடலில் பயின்றுள்ள அணிகளும் அவற்றில் காணத்தகும் நயங்களும்

(5 x 6 = 30 புள்ளிகள்)

2) பெண்ணின் கண்ணழகு,
   (அ) விவேக சிந்தாமணி
   (ஆ) அழகான ஒருசோடிக் கண்கள்
   ஆகியவற்றில் நயம்பட வர்ணிக்கப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)

3) சிலப்பதிகாரம் கானல்வரியில்,
   (அ) காவேரி நதியின் வளத்தை விபரிக்குமாற்றிலுள்ள சிறப்பு
   (ஆ) சோழமன்னனின் பெருமையும் நிலைபேறுடைய ஆட்சி சிறப்பும்
   ஆகியன வெளிப்படுமாற்றினை விளக்குக

(15 புள்ளிகள்)

4) பெருமரமாகிப் போனதொரு வாழ்வு என்ற கட்டுரையில்,
   (அ) தமிழ் சினிமாத் துறையில் பாலுமகேந்திராவின் சாதனைகள்
   (ஆ) சினிமாத்துறையை வளர்க்க அவர் செய்த முயற்சிகள்
   என்பன வெளிப்படுத்தப்படுமாற்றினை விபரிக்குக.

(15 புள்ளிகள்)

5) தீவு மனிதன் என்ற சிறுகதையில்?
   (அ) கதை சொல்லி தனிமைக்குள் சென்ற சந்தர்ப்பங்கள்
   (ஆ) அவர் மகிழ்ந்திருந்த சந்தர்ப்பங்கள்
   என்பவற்றை விளக்குக.

(15 புள்ளிகள்)